தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tanu.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 7-5-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## உழவர்களும் பட்டதாரியாக ஓர் அரிய வாய்ப்பு

உழவர்களுக்காக உலகிலேயே முதன் முதலாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் திறந்த வெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககத்தின் மூலமாக இளநிலை பண்ணைத் தொழில் நுட்ப பட்டப் படிப்பினை கடந்த 2010 - ஆம் ஆண்டு முதல் துவக்கி நடத்திவருகிறது. இப்பட்டப்படிப்பு உழவர்களின் வாழ்வு செழிக்க, உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில் பாடங்களைக் கொண்டுள்ளது.

இப்பட்டப்படிப்பில் வேளாண்மை குறித்த அனைத்துத் தகவல்களும் தனித்தனி பாடங்களாகத் தொகுக்கப் பெற்று எளியதமிழில் அச்சிடப்பட்டுள்ளது.இப்பாடத்தினைப் பயில அடிப்படைக் கல்வித்தொகையாக ரூ. 7,500/- (ஒரு பருவம்) வீதம் 6 பருவங்கள் வசூலிக்கப்படுகிறது. இப்பாடத்தினைப் பயில 27 வயது நிரம்பியவர்களாகவும், பத்தாம் வகுப்பு சேர்ந்தவராகவும் இருத்தல் போதுமானது.

மண்ணையும் பொன்னாக்கும் உழவர்களின் வாழ்வை வளமாக்கும் மாபெரும் திட்டமே இப்பாடத்திட்டம் என இப்பாடத்தைப் பயிலும் மாணவ உழவர் பெருமக்களின் கருத்து.

இப்பாடத்திற்கான இந்த ஆண்டிற்கான சேர்க்கைகள் வரும் ஜூன் 2013 முதல் துவங்கப்பட உள்ளது. இப்பாடத்தில் சேர்ந்து பயன்பெற விரும்புவோர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியை தொடர்புகொள்ளவும்.

இயக்குநர்,
திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககம்,
தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.

கைப்பேசி: 94421 11058, 94421 11048, 94421 11057, 0422 6611229
மின்னஞ்சல்: odl@tnau.ac.in
இணையதளம்: www.tnau.ac.in

மக்கள் தொடர்பு அலுவலர்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tanu.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 7-5-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தொலைநோக்குப் பார்வைக்கு வழிவகுக்கும் தொலைதூரக் கல்வி இயக்ககம்

இந்தியாவிலேயே முதன்முறையாக வேளாண் கல்வி வளர்ச்சிக்காக கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடந்த 2005ம் ஆண்டு திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககத்தை உருவாக்கியுள்ளது. இவ்வியக்ககம் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில் புரிவோருக்கு நேரடி விளக்கங்களுடன் கூடிய பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது.

இப்பல்கலைக்கழகத்தின் 14 கல்லூரிகள், 36 ஆராய்ச்சி நிலையங்கள், 16 வேளாண்மை அறிவியல் நிலையங்கள், 5 பயிர் மருத்துவ மையங்கள் போன்றவற்றின் மூலம் தொலைதூரக்கல்வி இயக்ககத்தின் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

வாழ்நாள் முழுவதும் தொடர்கல்வி அளித்தல், சுயதொழில் தொடங்கத் தேவையான தொழில் நுட்பத்திறனை மேம்படுத்துதல் போன்றவை இவ்வியக்ககத்தின் குறிக்கோளாகக் கொண்டு திறம் வாய்ந்த பேராசிரியப் பெருமக்களைக் கொண்டு, முதுநிலை பட்டம், முதுநிலை பட்டயப்படிப்புகள், இளநிலை பண்ணைத் தொழில் நுட்ப படிப்பு, சான்றிதழ்பாடங்கள் போன்ற பல்வேறு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### முதுநிலை பட்டப்படிப்புகள்

முதுநிலை வணிக மேலாண்மை (MBA), சுற்றுச்சூழல் மேலாண்மை (M.Sc. Environment Management), கரும்புத்தொழில் நுட்பம் (M.Sc. Sugarcane Technology) போன்ற முதுநிலைப்பட்டப் படிப்புகள் இரண்டாண்டுகளில் நான்கு பருவங்களாக நடத்தப்படுகிறது. இப்படிப்பிற்கு இளநிலை அறிவியலில் இளநிலைப்பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

### முதுநிலை பட்டயப்படிப்புகள்

மூலிகைப்பயிர் உற்பத்தி மற்றும் தரக்கட்டுப்பாடுஇ உயிர்த் தகவலியல், உணவு தொழில் நுட்பங்கள், சுற்றுச்சூழல் சார்ந்த பயிர்ப்பாதுகாப்பு, ஆற்றல் மேலாண்மை, இடுபொருள் மோலாண்மை, உணவு அறிவியல் மற்றும் பதப்படுத்துதல் (Food science and Processing), பூச்சி நோய்பரவுதலைத் தடுக்கும் முறைகள் (பயிர்பூச்சியியல்) போன்ற பாடங்கள்ஓராண்டுகால படிப்பாக இருபருவங்களில் நடத்தப்படுகின்றன. இதற்கு இளநிலைப் பட்டம் (அறிவியல்) பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேலும் உலகிலேயே முதன்முறையாக வேளாண் கல்வியின் ஒரு முன்னோடித்திட்டமாக, வேளாண் தொழில் நுட்பம் சார்ந்த பாடமாக "இளநிலை பண்ணைத்தொழில் நுட்பம்" (பி.எஃப்.டெக்) கடந்த 2010ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாடம் மூன்று ஆண்டுகளில் ஆறு பருவங்களாக எளிய தமிழில் நடத்தப்படுகிறது. இப்பாடம் வேளாண் அறிவுத்திறனையும், தன்னம்பிக்கையையும், மேம்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இப்படிப்பினைப் பயில 27 வயது நிரம்பியவராகவும், 10 ஆம் வகுப்பு சேர்ந்தவராகவும் இருத்தல் போதுமானது.

கணினியைச் சார்ந்த புதிய ஓராண்டு பட்டயப்படிப்பான **"பல்நோக்கு ஊடகமுறைகள்" (மல்டிமீடியா)** கடந்த 2012ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது. இப்பாடத்தினைப் பயில +2 தேர்ச்சி போதுமானது.

**சான்றிதழ் பாடங்கள்**

குறுகிய காலத்தில் தொழில்நுட்பங்களையும், வேளாண் உத்திகளையும் பொதுமக்கள் அறிந்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற உயரிய நோக்குடன் செயல் விளக்கப்பாடங்களுடன் நேர்முகப் பயிற்சிகளைக் கொண்டு ஆறுமாத படிப்புகளாக நவீன கரும்புச்சாகுபடித் தொழில் நுட்பங்கள், தோட்டக்கலைப் பயிர்களுக்கான நாற்றங்கால் தொழில்நுட்பம், காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மூலிகைப் பயிர்கள், மலர்கள் சாகுபடி, பருத்தி சாகுபடித் தொழில் நுட்ங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்துதல், தென்னை சாகுபடித்தொழில் நுட்பங்கள், நவீன பாசன முறை மேலாண்மை, பட்டுப்புழு வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல், அலங்காரத்தோட்டம் அமைத்தல், பண்ணைக்கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பழுதுபார்த்தலும், பராமரித்தலும் போன்ற பாடங்கள் தமிழிலும், தமிழ்மொழியிலான பாடங்களாகவும், Commercial Horticulture, Landscaping and Ornamental Gardening, Nursery Techniques போன்ற பாடங்கள் ஆங்கில மொழியிலும் நடடத்தப்படுகின்றன. இப்பாத்தினைப் பயின்றவர்கள் வங்கிக்கடன் பெற்று சுயதொழில் செய்து பயனடையலாம். இப்பாடங்களைப் பயில 15வயதும், எழுத படிக்கத் தெரிந்த கல்வித்தகுதியுமே போதுமானதாகும். எனவே இப்பாடங்களைப்பயில வயதோ,கல்வித்தகுதியோ ஒரு தடையல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ள:

இயக்குநர்,
திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.
தொலைபேசி: 0422-6611229
கைபேசி : 94421 11048, 94421 11057, 94421 11058
மின்னஞ்சல்: odl@tnau.ac.in
இணையதளம்: www.tnau.ac.in

மக்கள் தொடர்பு அலுவலர்